**சுருக்கம்**

அறிவிப்பு - சமூக நீதித்துறை – 2026-2027-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு சமூகநீதித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் சிறப்பு கூட்டுறவு சங்கங்கள் அமைக்க அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நீதித் (சிஉதி) துறை**

அரசாணை (நிலை) எண். 74

நாள்:13.10.2026
பராபவ, புரட்டாசி 26 -ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு-2057

படிக்கப்பட்டது:-

தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கடித எண்.ஜி1/854/2026, நாள்.11.09.2026.

**ஆணை:-**

2026-2027 ஆம் ஆண்டிற்கான சமூகநீதித் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

**"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில், சிறப்பு கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்படும்"**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் தலா ஒரு சிறப்பு கூட்டுறவு சங்கம் வீதம் மொத்தம் 38 சிறப்பு கூட்டுறவு சங்கங்களை, குறைந்தபட்சம் 25 சங்க உறுப்பினர்கள் கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர்களைக் கொண்டு சங்கங்களாக கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக அமைத்து செயல்படுத்துவதற்கான மூலதன முதலீடு (Capital Investment), குறைந்தபட்ச நிர்வாகச் செலவு (Minimum Administrative Cost) மற்றும் தொடர் நிதி (Recurring Fund) ஆகியவற்றை மேற்கொள்வதற்கும், மொத்தமாக ரூ.4,20,28,000 /- (ரூபாய் நான்கு கோடியே இருபது இலட்சத்து இருபத்து எட்டாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து, உரிய அரசாணை வழங்குமாறு தாட்கோ மேலாண்மை

இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கான விவரங்கள் பின்வருமாறு:-

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தினரை ஒன்றிணைத்து, கூட்டுறவு அடிப்படையில் பொருளாதார மற்றும் வாழ்வாதார மேம்பாட்டை உறுதி செய்தல்.
- இச்சங்கங்களை கடன் வழங்கும் நோக்கம் இல்லாத 'கடனற்ற கூட்டுறவு சங்கங்களாக' (Non-Credit Cooperative Societies) அமைத்து, உற்பத்தி, திறன் மேம்பாடு, தொழில்முனைவு ஆதரவு மற்றும் சந்தை இணைப்பில் செலுத்துதல்.
- இச்சமூகத்தினரால் நடத்தப்படும் உற்பத்தித் துறையை (Manufacturing) வலுப்படுத்தி, அவர்களது தயாரிப்புகளின் தரம் மற்றும் அளவை உயர்த்துதல்.
- உறுப்பினர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை திறன் மேம்பாட்டு பயிற்சி (Skill Development Training) வழங்குதல்.
- அனுபவமிக்க வழிகாட்டிகள் (Mentors) மூலம் தொழில்முனைவு வழிகாட்டுதல் மற்றும் தொடர் ஆலோசனை வழங்குதல்.
- உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அரசு மற்றும் தனியார் சந்தைகளுடன் சந்தை இணைப்பு (Market Linkage) ஏற்படுத்தித் தருதல்.
- ஒவ்வொரு மாவட்ட சங்கமும் தன்னிறைவுடன் இயங்க, குறைந்தபட்ச நிர்வாகச் செலவு (Minimum Administrative Cost) மற்றும் தேவையான மூலதன முதலீடு (Capital Investment) மற்றும் தொடர் நிதி (Recurring Fund) ஒதுக்கீடு செய்தல்.
- வேலையின்மையால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குதல்.

3. தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒரு சிறப்பு கூட்டுறவு சங்கம் ஏற்படுத்திடவும், ஏற்கனவே துறையின் கீழ் உள்ள கூட்டுறவு சங்கங்களையும் ஒருங்கிணைத்து இணையமாக நிர்வகிக்கவும் ஆதி திராவிட நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

4. இக்கூட்டுறவு சங்கங்களின் செயல்திறனை உறுதி செய்யும் வகையில் மாதம் ஒருமுறை ஆய்வு மேற்கொண்டு சங்கத்தின் முன்னேற்றத்தை

மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்று ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

டாக்டர். என்.சுப்பையன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், (முகூபொ) ஆதிதிராவிடர் நலம், சென்னை - 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை - 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
(ஆதிதிராவிடர் நல இயக்குநர், வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர், தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 009/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை -600 005/8/9.
அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள்,
(இயக்குநர், பழங்குடியினர் நலம் வழியாக)
நகல்:-
மாண்புமிகு சமூகநீதித்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி (பி.மிபி(ம)சிநு)/ வரவு-செலவு (பொது-I/II/வ.வ-I) த்துறை , சென்னை -600 009.
சமூகநீதித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
சமூகநீதி (அநமு-1/ஆதிந-5/ப.மே-1)த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/10/2026

பிரிவு அலுவலர்

13/10/26